# சென்னை மெட்ரோவுக்கான கடைசி ரெயிலும் தயார்!

## நாளை மறுநாள் வருகிறது!!

சென்ன்னை, டிச. 4– சென்னை மெட்ரோவுக்கான கடைசி ரெயில் வண்டியும் தயாராகிவிட்டது. இது நாளை மறுநாள் கொண்டு வரப்படுகிறது.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்க மெட்ரோ ரெயில் திட்டம் அறிவிக்கப்பட்டது. அதன்படி சென்னை சென்ட்ரல்– பூந்தமல்லி நெடுஞ்சாலை–கோயம்பேடு–வடபழனி – பரங்கிமலை வழியாக விமானநிலையம் வரை ஒரு பாதை அமைக்கப்பட்டது.

இந்தப் பாதையில் தற்போது மெட்ரோ ரெயில் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

அதே நேரத்தில் விமான நிலையத்திலிருந்து அண்ணாசாலை, சென்ட்ரல் வழியாக வடசென்னை சுங்கச்சாவடி வரை இன்னொரு பாதை அமைக்கும் பணியும் நடந்தது.

இதில் விமானநிலையத்திலிருந்து அண்ணாசாலையிலுள்ள தேனாம்பேட்டை வரை மெட்ரோ ரெயில் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. மீதியுள்ள பகுதியிலும் பணிகள் நிறைவடைந்துவிட்டன. இன்று முதல் ஒரு வார காலத்திற்கு சோதனை ஓட்டம் நடைபெற உள்ளது. தைப்பொங்கல் முதல் இந்த பாதையிலும் முழு அளவிலான போக்குவரத்து தொடங்கப்பட இருக்கிறது.

இந்த 2 பாதையும் சேர்ந்து மெட்ரோ ரெயிலின் முதற்கட்டமாக கருதப்படுகிறது. இந்த முதற்கட்டத்திற்காக மொத்தம் 42 ரெயில்களை தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஒப்பந்தம் பிரான்சு நாட்டைச் சேர்ந்த அல்ஸ்தோம் என்ற நிறுவனத்திடம் விடப்பட்டது. அதன்படி பிரேசில் நாட்டின் சாவ் பாலோ நகரில் உள்ள அந்த கம்பெனிக்கு சொந்தமான ஆலையில் 9 ரெயில்கள் தயாரிக்கப்பட்டன.

மீதி 33 ரெயில்களை ஆந்திர எல்லையிலுள்ள ஸ்ரீசிட்டி தொழிற்சாலையில் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி இந்த ஆலையிலிருந்து 32 ரெயில்கள் தயாரிக்கப்பட்டு கொண்டு வரப்பட்டன. கடைசியாக 42–வது ரெயிலும் இப்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

இது நாளை மறுநாள் மெட்ரோ ரெயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளது. தற்போது 25 ரெயில்கள் மட்டும் சேவையில் உள்ளன.

மீதி ரெயில்கள் கோயம்பேட்டில் உள்ள பணிமனையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. வடசென்னை வரை ரெயில் போக்குவரத்து தொடங்கியதும் அனைத்து ரெயில்களும் சேவையில் ஈடுபடுத்தப்படும்.